உ

சிவமயம்



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர்
# திருமதி தவமணி நாகலிங்கம்

அவர்களின் இறைபதம் குறித்த

# நினைவுமலர்

17.04.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர்
# திருமதி தவமணி நாகலிங்கம்

அவர்களின் இறைபதம் குறித்த

# நினைவுமலர்

**17.04.2016**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

உதிரத்தைப் பாலாய் ஊட்டிய
உயிரான எங்கள் அன்னை
கதிதன்னை தேனாய் அருளும்
கடவுட்கு நிகராய் எம்மனதில்
நிதியாக விளங்கும் தெய்வம்
தவமணியாம் எங்கள் தாய்க்கு
பதிவாகும் உறவுகள் சூழ இம்
மலர்தனைச் சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி!!!

இங்ஙனம்
நினைவு சுமந்து துதிக்கும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
மற்றும் உறவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

"தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்"



மண்ணில்
25.10.1938

விண்ணில்
18.03.2016

அமரர்

# திருமதி தவமணி நாகலிங்கம்

## அவர்கள்

## திதி வெண்பா

மன்மத வருடம் பங்குனி ஏகாதசியில்
இன் அமுது ஊட்டிச் சீராட்டிய எம்
இனியதாய் தவமணி நாகலிங்கம்
இறைபதம் அடைந்தார் என்று அறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி தவமணி நாகலிங்கம் அவர்களுக்கு முத்திப்பேற்றை அருளுமாறு தெய்வங்களை வேண்டுதல்

## மல்லாகம் பழம்பதி விநாயகரை வேண்டுதல்

அரசமரம் தினமும் அரவணைத்துப் பாட
அரசமர் செல்வனாய் வீற்றிருந்தே
சாலைவரும் அடியவர்க்குத் தரிப்பிடம் ஆகி
சாலவரம் அருளும் விநாயகா! உன் தன்
ஆலயமணி கேட்டுக் கண்விழிக்கும்
அருந்தவப் பேறாம் எங்கள் அம்மா
காலமெலாம் உன்னடி தஞ்சமென வந்த
தவமணிக்கு நற்பேறு வழங்கும் ஐயா!

## தெல்லிப்பழை துர்க்கை அம்மனை வேண்டுதல்

தெல்லியம்பதி நிகர் துர்க்காபுரம்தரி
ஸ்ரீ துர்க்கை அம்மா!
அழுகின்ற குழந்தைக்கு பாலூட்டி மகிழ்வித்து
ஆறுதலளித்தவள் நீயல்லவோ
எழுகின்ற போதெல்லாம் உனையே வணங்கும்
எங்கள் அம்மா தவமணியை உன்
பழுவினில் ஏற்றுப் பாதுகாப்பளித்து
பரிவுடன் அவரை ஆதரிப்பாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மல்லாகம் கோட்டு பைரவரை வேண்டுதல்

எழில் மேவும் மல்லாகம் பதியில்
மலை வேப்ப மர நிழலில்
பொழில் கொன்றைப் பூச் சொரியும்
கோடுறை பைரவப் பெருமானே!
ஒளி மேவி இருளகற்றும் தேவன் நீ
எனப் போற்றுவாள் எங்களம்மா - உன்
கழலில் மேவிய எம் அன்னை தவமணியை
காலமெலாம் காத்தருளும் ஐயனே!

## மல்லாகம் கண்ணகி அம்மனை வேண்டுதல்

ஆயிரம் கண்ணுடைய கண்ணகி அம்மா!
எம் அயலில் கோயில் கொண்டவளே
பூவரச மரநிழலில் பூவடிகள் பதித்து
இப் பதிதனில் வாழ் பூரணியே
கோடிமுறை உனைத் துதித்துக்
கும்பிட்ட எமது தாயை
நாடிவரமீயும் அம்மா
நற்கதியை வழங்கும் அம்மா!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி நாமாவளி

சுத்த சக்தி ஓம்சிவம் சுத்த சக்திஓம் சிவம்
சுத்த சக்தி ஓம்சிவம் சுத்த சக்திஓம் சிவம்
துஸ்ட எண்ணம் தூர ஓட்டும் தூய சக்தியே
துயர் பாவம் இடர்களையும் துரிய சத்தியே
நஷ்ட லாப எண்ணம் போக்கும் நல்ல சக்தியே
நம்பியுன்னைக் கைதொழுதோம் நல்ல சக்தியே
தாயிலாது சேயிலை தரையிலாது பயிரிலை
நீயலாது உயிரிலை நிகர் இலாது தெய்வமே
(சுத்த சக்தி)

சுத்தமான நெஞ்சிலே தூங்குகின்ற ஜோதியே
அத்தனே என் அம்மையே அரும்பெரும் துணைவனே
நெக்கு நெக்கு உருகியெ நினைந்திடும் புனிதரின்
உட்குவிந்த தியானத்தில் ஒளிருகின்ற தெய்வமே

புத்தியில் அறிவெனப் புலன்களில் உணர்வென
எத்துயிர்க்கும் உயிரென உலவுகின்ற தெய்வமே

வானிலும் கடலிலும் மழையிலும் கதிரிலும்
கானிலும் மலையிலும் கலந்து நிற்கும் தெய்வமே

ஊற்றிலும் சுனையிலும் உலகிலே வளஞ்செயும்
ஆற்றிலும் கலந்து வாழும் அன்புமிக்க தெய்வமே

பொறி புலன் கரணமும் பொலிவுற நிலவிடும்
அறிவும் ஈந்தருளுவாய் ஆன்மநேயத் தெய்வமே

வந்து செல்லும் வாழ்விலே மாசில்லாத நேசமும்
நொந்தவர்க்குதவிடும் நோன்பும் ஈந்தருளுவாய்

நன்றும் எங்கும் உன்னையே யாது மாகக் கண்டுயிர்
என்று செய்யும் சக்தியை நல்குவாய் இறைவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலகமான உலகிலே கருணையான ஆட்சியே
நிலவ நாட்டும் ஆற்றலை நேயருக்கு அருளுவாய்

கள்ளமற்ற உள்ளமும் கட்டில்லாத வீரமும்
வெள்ளினிய சித்தமும் தியான வாழ்வும் ஈகுவாய்

தூய்மையான நெஞ்சமும் தொண்டு செய்யும் ஆர்வமும்
தாய்மையான வண்மையும் வரம் எனக்கு உதவுவாய்

கண் கொடுத்த தெய்வமே கதி கொடுத்த தெய்வமே
பண் கொடுத்த தெய்வமே பரமஞான ஜோதியே

உடல் உறுதி ஈகுவாய் உள்ளுறுதி ஈகுவாய்
மடமை வறுமை அச்சமற்ற மல்கு செல்வம் ஈகுவாய்

சுயநலம் பொறாமையும் சூதும்வாதும் இன்றியே
தயவுடன் உயர்க்குலம் தழைத்திட அருள்குவாய்

எத்திசை உலகமும் இதயமான கோவிலில்
சுத்த யோக சித்தியால் ஒத்து வாழ நீ அருள்

போற்றி போற்றி நின் அருள் போற்றி போற்றி நின்ஒளி
போற்றி போற்றி நின்புகழ் புனிதமான தெய்வமே

(சுத்த சத்தி)

சுத்தசத்தி சுத்தசத்தி சுத்தசக்தி ஓம் சிவம்
சுத்தசத்தி சுத்தசத்தி சுத்தசக்தி ஓம் சிவம்

சத்தியஞான தர்மசக்தி சாந்த சக்தி ஓம்சிவம்
சச்சிதானத் தாத்மசக்தி சர்வசக்தி ஓம்சிவம்

(சுத்த)

வேத சாஸ்த்ர சகலகலா வித்யாசக்தி ஓம்சிவம்
வீரதீர தைர்யசக்தி விஜயசக்தி ஓம்சிவம்

(சுத்த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதகீத கானகாலா நடனசக்தி ஓம்சிவம்
மஹாமந்திர யந்திர தந்த்ர வஸ்யசக்தி ஓம்சிவம் (சுத்த)

யோகயோக த்யாக சக்தி லோகசக்தி ஓம்சிவம்
தாகமோஷ சோகரஹித தபோசக்தி ஓம்சிவம் (சுத்த)

துஷ்டசத்துரு நாசசக்தி துர்க்காசக்தி ஓம்சிவம்
அஷ்டலக்ஷ்மி ஞானவாணி அமரசக்தி ஓம்சிவம் (சுத்த)

குஞ்சிதபத அபயஹஸ்த வாஞ்சிதபவ தாயகம்
குருபரசிவ ஹரஹர நடராஜசக்தி ஓம்சிவம் (சுத்த)

ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
ஷுந்தரவதனி ஸுகுண மனோஹரி
மந்தஹாஸ முக மதிவதனி
சந்தன குங்குமம் அலங்காரமுடனே
தந்திடுவா யுந்தன் தரிசனமே. (ஓம்)

நந்தி தேவருடன் முனிவரும் பணிய
ஆனந்த முடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயனயனுடன்
வகையாயுன் புகழ் பாடிடவே (ஓம்)

தங்கச் சிலம்பு சலசலவென்றிட
தாண்டவமாடித் தனயன் மகிழ்ந்திட
பொங்கும் மானந்தமுடன் புவிமேல் விளங்கும்
மங்கள நாயகி மகிழ்வாய் வருவாய். (ஓம்)

வேதங்கள் உன்னை வேண்டிப்பாடிட
விரும்பி ஸரஸ்வதி வீணை வாசித்திட
ஸதானந்த மான ஜோதிஸ்வரூபி
ராஜ ராஜேஸ்வரி சரணம் சரணம். (ஓம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# சகல கலாவல்லி மாலை

## காப்பு

ஆய கலைக ளறுபத்து நான்கினையு
மேய வுணர்விக்கு மென்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும் - துடியிடையும்
அல்லும் பகலு மனவரத முந்தித்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

வெண்டாமரைக் கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ?
சக மேழும் அளித்து
உண்டான் உறங்க வொழித்தான்பித்தாக
உண் டாக்கும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலா வல்லியே! 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற்கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமுது
ஆர்த்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ!
உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாபமயிலே
சகல கலாவல்லியே 3

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே. 4

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே?
நெடுந் தாட் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்ந்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே! 5

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்த
நல்காய் எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலு மன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே! 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்காய்
உளங்கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே! 7

சொல்விற் பனமும் அவதானமும்
கல்வி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்தடிமை கொள்வாய்
நளினாசனஞ் சேர்
செல்விக் கரிதென் றொருகாலமுஞ்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப்பேறே
சகல கலாவல்லியே! 8

சொற்கும் பொருட்கும் உயிராம்மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே!
சகல கலாவல்லியே! 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச் செய்வாய்!
படைப்போன் முதலாம்
விண்கண்டதெய்வம் பல்கோடி யுண்டேனும்
விளம்பின் உன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ!
சகல கலாவல்லியே! 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி தவமணி நாகலிங்கம் அவர்களின் ஜீவ யாத்திரை குறித்த வாழ்க்கைப் பதிவுகள்

இந்துமா கடலின் முத்தெனத் திகழும் இலங்கைத் திருநாட்டின் வடபால் முத்தமிழும் நான்மறையும் தழைத்தோங்கும் யாழ்ப்பாணத்தில் நீர்வளமும் நிலவளமும் ஒருங்கே அமைந்த வலிகாமம் வடக்குப் பகுதியில் நாற்புறமும் கோவில்களும் கல்விச்சாலைகளும் அமையப்பெற்று பழம்பதி விநாயகரின் அருட்கடாட்சத்தைப் பெற்ற பழமையும் புதுமையும் பரவும் மல்லாகம் பதியினில் அன்பிற்கும் பண்பிற்கும் எடுத்துக்காட்டாய் வாழ்ந்த திரு. திருமதி மரியாம்பிள்ளை சின்னாச்சி தம்பதியினருக்கு இரண்டாவது புதல்வியாக 1938ம் ஆண்டு ஐப்பசி மாதம் 25ம் திகதி தவமணி ஜனனித்தார்.

மழலைக் காலம் தொட்டு தகப்பன் மீது பற்றும் தாயார் மீது அளவற்ற பாசமும் கொண்ட இவர், சிறிய தந்தை, சிறிய தாய், மாமன்மார்களையும் தனது அன்பால் ஈர்த்துக் கொண்டார். எல்லோரும் இவரை செல்லமாகப் பிள்ளை என்றே அழைத்து வந்தனர்.

உடன் பிறந்தவர்களான அண்ணன் நடேசு, தங்கை மீனாட்சிதேவி, தம்பி தங்கவேல் ஒன்றுவிட்ட சகோதரர்கள், மைத்துனிகள், மைத்துனர்களென கூட்டாக கலகலப்பாக வாழ்ந்தார். இவர் சிறுவயது தொடக்கம் நிறைவான உள்ளம், நேர்கொண்ட பார்வை, அழகான தோற்றம், குறுநகை வதனம், நன்னடத்தை ஒழுக்கம் எனும் நற்பண்புகளுடன் கல்வியிலும் கலைகளிலும் இறைபக்தியிலும் சிறந்து விளங்கினார்.

தனது ஆரம்பக்கல்வியை யா/ மல்லாகம் அமெரிக்க மிசன் பாடசாலையிலும் (கனிஷ்ட வித்தியாலயம்) இடைநிலைக்கல்வியை யா/ மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையிலும் கற்றுத் தேர்ச்சியடைந்தார். பிரவேச பண்டிதம், பால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதம் ஆகிய கற்கை நெறிகளைகயும் பூர்த்தி செய்து ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் இணைந்து தேர்ச்சி பெற்று ஆசிரியர் சேவைக்குத் தகுதியானார்.

இந்நாளில் திருமணமும் கைகூடிவர தமது இருபத்தொராவது வயதில் தெல்லிப்பழையைச் சேர்ந்த திரு. திருமதி கணபதிப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியினரின் ஏகபுத்திரனான நாகலிங்கம் (கொள்வனவு முகாமையாளர் -Walker & Greek) என்பவரை மணம் புரிந்து கொழும்பில் இல்லற வாழ்க்கையை இனிது நடாத்திவந்தார். இவர்களின் இல்லறப் பேறாக ரவீந்திரன், ரவிச்சந்திரன், முரளீதரன், சுகந்தி, மைதிலி எனும் பிள்ளைச் செல்வங்களைப் பெற்றனர். பிள்ளைகளும் பெற்றோரிடமும், மற்றோரிடமும் அன்பும் பாசமுமாய் நற்பண்புகளைக் கொண்டிருந்தனர்.

தமது பிள்ளைகள் கல்வியில் உயர்வுபெற வேண்டுமென்று பேரார்வம் கொண்ட தம்பதியினர் புதல்வர்களை D.S. சேனநாயக்கா கல்லூரி, பெண்பிள்ளைகளை விவேகானந்தா கல்லூரி என்று புகழ்பூத்த பாடசாலைகளில் கல்வி பெறச் செய்தனர். இவர்கள் கொழும்பில் பல பாகங்களிலும் பொறளை, அழுத்மாவத்தை, கொட்டாஞ்சேனை, ராஜகிரியா, கிரிலப்பனை என்று சிங்கள முஸ்லிம் சமூகத்தினருடன் வாழ்ந்தார்கள். இவருக்கிருந்த சிங்களமொழியாற்றல் இவரை எல்லோருடனும் சகசமாகப் பேசிப் பழக வைத்தது. பிற இன மக்களிடம் மிகவும் அன்பு பாராட்டி வாழ்ந்து வந்தார்.

தொழில் காரணமாக இவர்களுடன் வசித்துவந்த சிறிய தந்தை, மாமன்மார், சகோதரர், மைத்துனர்கள், உறவினர்களென எல்லோரையும் ஏற்று ஆதரித்து அன்பு செய்தார். இவரது பிள்ளைகளுக்கும் இவ்வுறவுகளின் அன்பும் அரவணைப்பும் கிட்டியது. இவரது கணவர் நாகலிங்கமும் மனைவியின் நற்குணங்களில் திருப்தி கொண்டு வியந்து மெச்சும்படி பத்தாவிற்கேற்ற பதிவிரதையாய் இல்லறப் பண்பியல்புடையாளாய் வாழ்ந்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு வாழ்ந்து வரும் நாளில், வந்தது 'கறுப்பு யூலை' 1983ம் ஆண்டு இனக்கலவரத்தால் ஆயிரமாயிரம் தமிழ் குடும்பங்கள் அல்லறப்பட்டுச் சீரழிந்தது. தவமணி நாகலிங்கம் குடும்பத்தினரும் உயிர்ச்சேதம் இல்லாமல் தப்பித்து யாழ்ப்பாணம் மீண்டனர். பொருளாதாரம், தொழில், பிள்ளைகளின் கல்வியில் பாதிப்புக்கள், எதிர்பார்த்த உறவு களை எட்ட முடியவில்லை. இருப்பினும் அவர்கள் மனம் உடைந்து போகவில்லை. பெண்பிள்ளைகளை யூனியன் கல்லூரியில் கல்வியைத் தொடரச் செய்தனர். மூத்தமகள் வணிகத்துறையிலும் இளையமகள் கணிதத்துறையிலும் உயர்கல்வியைப் பெற்றனர்.

தனது சொந்தவூரான மல்லாகத்தில் அழகான வீடொன் றை அமைக்க வேண்டுமென தவமணி ஆசைப்பட அவர் கண வரும் அதனை நிறைவேற்றினார். அவர்கள் கட்டிய அழகான வீட்டில் ஆனந்தமாய் வாழ்ந்து வரும் நாளில் கணவர் நோய் வாய்ப்பட்டுவிட அவரைப் பார்க்கக் கொழும்பு சென்று கணவ ரின் துன்பத்தில் பங்குகொண்டு பணிவிடைகள் புரிந்தார்.

பிள்ளைகளும் திருமண வயதை எட்டிவிட்டனர். அவர்க ளுக்குத் திருமணம் செய்து பார்க்க தம்பதிகள் ஆசைப் பட்டனர். முதலில் ரவிச்சந்திரன் திருமணத்தை நடாத்தி வைத்து மகிழ்ந்தனர்.

பின்னர் 1994ஆம் ஆண்டு இவர் கணவரை இழக்க நேர்ந்தது. கணவரின் இழப்பு இவரை மீளாத்துயரில் தள்ளிவிட் டது. இருப்பினும் தன் கணவரின் விருப்பங்களை நிறைவேற்ற விளைந்தார். ரவீந்திரன், முரளிதரன், சுகந்தி ஆகியோருக்கும் திருமணங்கள் நடந்தேறியது. அதன் பயனாய் பேரப்பிள்ளை களை அரவணைத்து ஆனந்தமடைந்தார். தமது இளைய மகள் மைதிலிக்கும் நல்லதோர் வரனை அமைத்துக்கொடுக்க வேண்டும் என்று பேரவாக் கொண்டிருந்தவேளையில் 2010 ஆம் ஆண்டு மாரடைப்பு நோயால் பீடிக்கப்பட்டார். தக்க தரு ணத்தில் கிடைக்கப்பெற்ற மருத்துவ சிகிச்சையால் உயிர் பிளைத்து மீண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012ஆம் ஆண்டு கொழும்பிலிருந்து வந்த மூத்தமகன் குடும்பத்தினர் தாயாருடன் வசித்தனர். 2013ல் பெறாமகளின் திருமணம் 2014ல் பேரப்பிள்ளைகளின் பூப்புனித நீராட்டு, மூத்தமகன் பேரப்பிள்ளைகளின் வருகை 2014 செப்ரெம்பரில் இளையமகளின் திருமணம் என்று மகிழ்ச்சியும் பூரிப்புமாய் வாழ்ந்த இவர் 2015ஆம் ஆண்டு முழுவதும் யாழ்ப்பாணத் திலுள்ள பிரசித்திபெற்ற தலங்களைத் தரிசித்துப் பேரானந்தம் அடைந்தார்.

கொழும்பிற்கும் ஒரு தடவை சென்று வரவேண்டுமென விரும்பிய இவரை 2015 ஆவணியில் அழைத்துச் சென்றனர். தன்னுடைய நண்பர்கள், உறவினர்களைச் சந்தித்ததுடன் அங் குள்ள இஷ்டதெய்வ ஆலயங்களையும் தரிசித்துத் திரும்பி னார்.

இவ்வாறிருக்கையில் 2016 ஜனவரியில் இவர் வைரஸ் காய்ச்சலுக்குள்ளாகி யாழ். வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுக் குணமடைந்து மீண்டார். மார்ச் 18அம் திகதி காலை நேர்த்தியாக உடையணிந்து மகளுடன் தனது மாதாந்த நோய்ப்பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக் குச் சென்ற தருணம் அங்கு திடீரென சோர்வும் மூச்சுத்திணற லும் ஏற்பட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். மகளும், பெறாமகளுமாக அவருக்கு ஆறுதல்கள் செய்தனர். அவரும் மக்கள் இருவரையும் ஆரத்தழுவி முத்தமிட்டு தன் ஆற்றாமை யை அறிவித்தார். மூச்சுத்திணறல் முற்றுப்பெற்றது. திருமதி தவமணி நாகலிங்கம் இறைவன் திருப்பதம் பற்றினார்.

எம் இனிய அன்னை இறப்பினால் எம்மைப் பிரிய வில்லை. என்றும் எம் அனைவரது இதயத்திலும் நீங்காது நிலை பெற்றிருப்பார் என்று உறுதி செய்து சாந்தியடைவோ மாக.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகன்மார் புலம்பல்

கருவறையில் முதல் முறையில் இருவர் எமைத் தாங்கினீர்கள்
ரவி, ரகு வெனத் திருப்பெயர்களிட்டழைத்து மகிழ்ந்தீர்கள்
முரளிதரன் (சூட்டா) எனை மூன்றாம் மகனாய் பெற்றீர்கள்
சுகந்தி, மைதிலியைத் தங்கையராய் எமக்குத் தந்தீர்கள்
முத்தாக ஐவரையும் முறையாய் வளர்த்தீர்களே அம்மா
சொத்தான கல்விதனைத் தலைநகரினிலே தந்த தாயே
பாங்கான பண்புடனே பிற மொழிகள் பேச வைத்தீர்
ஓங்குபுகழுடன் நாம் வாழ வேண்டுமென ஆசை கொண்டீர்
கண்டிப்பான அப்பாவுடன் கதைக்க நாம் பயந்தபோதும்
கருத்துடனே எடுத்துரைத்துக் காரியங்கள் ஆற்றி வைத்தீர்
ஐயோ... அம்மா ஐயோ... அம்மா உமை
தீக்கிரையாக்கிவிட்ட திரிபுத்திரர் நாம் ஆனோமே
திக்கற்றுத் திணறும் எமக்குத் திசைகாட்ட வருவீர்களா?

மகன்மார்
ரவி, ரகு, சூட்டா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்தமகள் புலம்பல்

அம்மா! உங்களின் மரணச் செய்தி கேட்டவுடன்
அடியற்ற மரமாய் ஆகிவிட்டேன் நான்
கடைசியாய் ஒரு தடவைதானும் உங்களைக்
காணக்கூட முடியவில்லையே எனக்கு
என் கணவர் பிள்ளைகளுடன் உமைக் காண வரவிருந்தேன்
'நீ வராவிட்டாலும் அவருடன் மகளையும் அனுப்பு
நான் பார்க்க வேண்டு'மென்று ஆசையாய்க் கேட்டீர்களே
அனைவருமே அழுகின்றோம் ஆறுதல்கள் தாருமம்மா
அம்மம்மாவை ஒருமுறையேனும் நான் பார்க்கவில்லையே
என்றேங்கும் மாட்சிகாவை வந்து பார்க்கமாட்டீர்களா?
உங்களைக் கண்டுவந்த நாள்முதலாய் மெல்லினனும்
தானியாவும்
அம்மம்மாவிடம் போவோம் என்று அடம் பிடித்தார்களே
இனி யாரை நானவர்க்குக் காண்பிப்பேன் அம்மா
ஆவணியில் வாருங்கள் நானிருப்பேன் என்று உறுதி சொல்லிவிட்டு
பூவணி அலங்காரத்துடன் போய்ச்சேர எண்ணியதேன்?
தேவனடி சேர்ந்தீர்களோ! திரும்பிவர மாட்டீர்களோ?

என் செல்ல அம்மா நீங்கள் என்னை விட்டுப் பிரியவில்லை
நீங்கள் என்றும் என் இதயத்தில் இருப்பீர்கள்
என் உயிர் என்னைவிட்டுப் பிரியும் வரை.

மகள் சுகந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைய மகள் புலம்பல்

அம்மா அம்மா என்று அழைத்து மகிழ்ந்த நா
அம்மா... அம்மா... வென அழுது புலம்புதே
பொல்லாக் காலனேன் உமை அழைத்தானம்மா?
நாம் புழுவாய்த் துடிப்பதைப் பார்த்திடவா
வல்லமைகள் பல எமக்களித்த தாயே
வற்றாத அன்பூற்றில் எமை நனைத்தீரே
அன்னிய தேசத்திலும் கண்ணியமாய் எமை வளர்த்தீர்கள்
சிங்கள மக்களுடன் நீர் கொண்ட சிநேகிதம்தான்
அன்றைய கலவரத்தில் அனைவருயிரும் காத்ததம்மா
பிற இன மக்களுடன் நீர் கொண்ட பேரன்பு
அனைவரையும் உமைக்காண அழைத்ததம்மா இல்லம்
ஐயோ! எல்லோரும் ஆறாத்துயர் பகிர்கின்றார்
எப்போ நீர் வருவீர்? என்றே ஏங்குகின்றோம்
தேம்பி நாம் அழும் ஓசை கேட்கிறதா அம்மா
தேறுதல் எமக்குத்தர மாட்டீர்களா அம்மா
கற்றனில் திருமணம் செய்யக் கனதூரம் யோசித்தீர்கள்
மருமகனாய் பெற்றமகன் மாண்புடையான் என உரைத்தீர்
அருமையாய் அவரையும் அன்பு செய்தீரே அம்மா
உன்னை நான் வெறுமையாய் விட்டுவிடவில்லையடி
பொறுமையான ஒரு புருஷன் கிடைத்துவிட்டான்
இனி உனக்கு நிம்மதி என்றே சென்றிட்டீரோ
உருகுகின்றேன் அம்மா... உம்போன்ற அன்னையை
நான் எப்பிறப்பிற் காண்பேனோ
அம்மா... அம்மா... அம்மா...

**மகள் மைதிலி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் புலம்பல்

கற்றறிந்த பண்டிதராய் கண்கண்ட ஓர் தாயாய்
காலத்தால் கிட்டாத அன்புதனைப் பெற்றோமே
வற்றாத அறிவும் வாழ்வினிலே உயர்வும் கொண்டு
வையத்தில் எமக்கு வாய்த்த மாசில்லா மாமி நீங்கள்
சற்றும் மனதினிலே தோன்றாத உம் மரணம்
சிந்தை கலங்கியே சோர்ந்திட வைத்ததம்மா
மல்லாகம் பதியதுவே உம்பெருமை பேசக் கேட்டோம்
சொல்லாமல் சென்றதென்ன? சொரிகின்றோம் கண்ணீர் நாம்
தோழியர் போல் உங்களிடம் எம்சோகம் இறக்கிவைத்தோம்
வாழுவீர்கள் இன்னும் பல காலமென்றே நினைத்திருந்தோம்
மாண்டுவிட்டீர்களென்று மனம் இன்னும் ஒப்பவில்லை
மீண்டு வாருங்கள் மாமி... மீண்டு வாருங்கள்...

மருமக்கள்

சஜிகலா, கருணாவதி, றாஜினி,
பக்தசீலன், ஜெயராஜ், பகீரதன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகள் புலம்பல்

அன்புடன் மடியிலேற்றி அழகான நிலாக்காட்டி
அன்னம் தனை ஊட்டி ஆசையாய் சீராட்டி
கன்னம் தனைக் கொஞ்சி கனிகூர்ந்தணைப்பீர்களே -அப்பம்மா
இன்னும் கொஞ்சநாள் நீங்கள் இருந்திருக்கக் கூடாதா?

அம்மம்மா! உங்களைப் பார்க்க ஆவலாய் ஆவணியில்
வரவிருந்தோமே
நான் சுகமாய் இருப்பேன் வாருங்கள் என்றீர்களே
தேனாகப் பேசும் உங்கள் திருவதனம் தனை
நாம் காணுமுன்னே ஏனம்மம்மா சென்றீர்கள்

கோகுலத்தில் குடிகொண்ட கோலமயில் நீங்கள் மம்மா
காலையிலும் மாலையிலும் நாமும்மைக் காணவருவோம்
அன்பும் ஆக்கினையும் சேர்த்தே தந்தபோதும்
ஆசையுடன் நீங்களதை அனுமதிப்பீர்களே
இன்றுமைக் காணாமல் ஏங்குகின்றோம் மம்மா!

பேரப்பிள்ளைகள்
**கோபிகா, பவன், சஞ்சயன், தரணியா,**
**அட்சயன், மாட்சிகா, தானியா, மெல்லினன்,**
**அட்சயா, வைசாலி.**

## பிரான்ஸிலிருந்து பேரப்பிள்ளைகள்

எங்கள் ஆசை அம்மம்மா
எங்களை விட்டுவிட்டு எங்கு சென்றுவிட்டீகள்.
அம்மம்மா உங்களை காணாமல் தவிக்கும்
உங்கள் செல்லக்குட்டிகள்
அம்மம்மா உங்களுக்கு எங்கள் அன்பு முத்தங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரிகள் புலம்பல்

மணி! மணி! என்று மனம் நிறைய அழைப்பாய் அக்கா
உமா! உமா! என்று உருக்கமாய் அழைப்பாயே நீ
உனது குரல் எங்கோ கேட்கிறதே அக்கா!
ஓ எங்கோ கேட்கிறது
அக்கா நீ எங்கே இருக்கிறாய்
எமக்குச் சொல்லமாட்டாயோ?
பொல்லாக் காலனின் வசமாகிவிட்டாயோ?
வெல்ல வழியில்லாமல் வேதனைகள் பட்டாயோ?
சொல்லொண்ணாத் துயரத்தில் எமைத்தள்ளிவிட்டாயே
எல்லா இடங்களுக்கும் மூவருமாய் செல்வோமே
ஏனக்கா நீமட்டும் எங்கோ சென்றுவிட்டாய்?
எம்மால் முடியவில்லை உன்பிரிவைத் தாங்குதற்கு
ஆராரோ வந்தார்கள் ஆறுதல்கள் சொன்னார்கள்
தீராது எமது துயர் தீர்க்க நீ வரவேணும்
கோடான கோடி அன்பைக் கொட்டித்தீர்க்க முடியவில்லை
ஈடாகார் ஒருவரும் உக்கிணையாக ஒருபோதும்
கூடு ஒன்று கட்டினாய் கோயிலாய் பேணினாய்
மாசு மறுவில்லாமல் மக்களை நீ காத்திட்டாய்
பிறரை மதித்து நீ பெருமையுடன் வாழ்ந்தாய் அக்கா
பேரப்பிள்ளைகளிடம் பேரன்பு காட்டினாயே
அண்ணன் தம்பியரை அடிக்கடி நினைவு கூர்ந்தாய்
அவர்கள் தானுன்னை அவசரமாய் அழைத்தாரோ
அன்பான எங்கள் அத்தான்தான் அழைத்தாரோ
எங்கே நீ சென்றாலும எமைக் காண வந்திடக்கா
இங்கே நீ இல்லாமல் இயல்பாய் நாமில்லையக்கா
என்னதான் நேர்ந்தாலும் திடசித்தம் வேண்டுமென்பாய்
சித்தம் கலங்குதக்கா சீக்கிரம் நீ வந்திடக்கா...
அக்கா... அக்கா... அக்கா...

சகோதரிகள்
மீனாட்சிதேவி, உமாதேவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துனர்கள் மைத்துனிகள் புலம்பல்

பகுத்தறிவு நிறைந்த மச்சாள்
பரிவான எங்கள் மச்சாள்
பெரியக்கா! என்றே நாம் பேரன்பு வைத்த மச்சாள்
தயவும் தாழ்மையும் தாயன்பு நேசமும்
தார்மீக சிந்தையும் தங்களிடம் கண்டோமே
கொழும்பு நகர்களிலும் எமை ஆதரித்து மகிழ்ந்தீரே
மனம் நிறைந்த உம் கணவரும எமை மாற்றார் என
எண்ணவில்லை
கற்றறிவால் எல்லோரையும் கவரும் வண்ணம் வாழ்ந்தீரே
கரிய நிற அழகு, கார்கூந்தல் பேரழகு
இளமையிலும் முதுமையிலும் இங்கிதமான பண்பு
நேர்த்தியாய் உடையணியும் நேரிழையாள் நீங்கள் மச்சாள்
உரித்தான மைத்துனியே உமை இழந்துவிட்டோம்
- என்செய்வோம்
சிந்தை நொந்து அழுகின்றோம் - உளச்
சீர்மியம் நீர் தருவீரோ?

மைத்துனர் மைத்துனிமார்
**சண்முகநாதன், கமலநாதன், கருணாநிதி,**
**துரைராசா, தேவி, கோமதி, தங்கமணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறாப் பிள்ளைகள் புலம்பல்

நீங்கள் பெறாப்பிள்ளைகள் எங்களின் பெயர்களை
பேறாய் நினைத்துச்சரித்த பெரியதாயே மம்மி!
பெற்ற பிள்ளைகளாய் எமைப் போற்றிய பெரும்தாயே
கற்றறிந்த ஞானத்தால் காலமறிந்து போதிக்கும்
கனிவான நல்ல ஆசிரியர் நீங்கள் மம்மி
கவிதைக்கு அடி தந்தீர் கல்வி, கலைகள் ஊக்குவித்தீர்
பரிசில்கள் நாம் பெற்றபோது பாராட்டி மகிழ்ந்திடுவீர்
சொற்சுவையுடன் பேசி சோபை பொங்க சிரிப்பீர்களே
நற்சுகம் அடைந்து மீள்வீர்கள் என்றே நம்பினோமே
மம்மி மம்மி என்று மகிழ்வாய் நாமழைக்க
இவ்வூரும் அவ்வாறே உமையழைத்து மகிழ்ந்ததுவே
பற்றாய் எமை அணைத்து பாசமாய் முத்தமிட்டு
பரிவான ஆசிதந்த பார்வதியாள் நீங்கள் மம்மி
கற்றோரைக் காமுறுவீர் மற்றோரையும் மதிப்பீர்
உற்றார் உறவினரை உன்னதமாய் எண்ணிடுவீர்
எங்களின் நண்பர்களை உங்களின் நண்பர்களாய்
இதமாகப் பேசி இயல்பாகப் பழகினீர்கள்
எல்லோரின் இதயங்களையும் வலிக்கவைத்து
எங்கே நீங்கள் சென்றீர்கள் மம்மி?
இனிமையான பேச்சுத்தர இனிமேல் வரமாட்டீர்களோ?
மம்மி மம்மி மம்மி...

பெறாப்பிள்ளைகள்
**வாசுகி, யசோதா, யசோதரன்,**
**கௌதமன், கௌசிகன்,**
**கௌரீசன், கௌதீபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண் கோலங்களின் வகைகள்

**ஒற்றை எண்கள்**

இரண்டால் வகுக்கப்படும்போது ஒன்று மீதியாக வரக்கூடிய எண்கள் ஒற்றை எண்களாகும்.
1, 3, 5, 7, 9, 11, 13, 15, ...................................... (அருகேயுள்ள இரண்டு எண்களுக்கிடையிலான வித்தியாசம் 2 ஆகும்)

**இரட்டை எண்கள்**

இரண்டால் வகுக்கப்படும்போது மீத எதுவும் வராத எண்கள் இரட்டை எண்கள் ஆகும்.
2, 4, 6, 8, 10, 12, 14, 16, ....................... (அருகேயுள்ள இரண்டு எண்களுக்கிடையிலான வித்தியாசம் 2 ஆகும்)

**செவ்வக எண்கள்**

நிரைகளும், நிரல்களும் செவ்வக வடிவில் கொண்டு பூத்தியாக்கப்படுகின்ற எண்கள் செவ்வக எண்களாகும். எண்ணும் எண்களில் முதலாவது செவ்வக எண் 6 ஆகும். (1 முதல் 25 வரையுள்ள எண்களில்) செவ்வக எண்கள் - 6, 8, 10, 12, 14, 15, 18, 20, 21, 22, 24)

**சதுர எண்கள்**

சமமான நிரைகளையும் நிரல்களையும் கொண்டு சதுர எண்களாகும்.
(ஓர் எண் அதே எண்ணால் பெருக்கப்பட்டு வரும் எண் ஒரு சதுர எண்ணாகும்)
1, 4, 9, 16, 25, 36, 49, 64, 81, 100

**முக்கோண எண்கள்**


முக்கோண வடிவில் கோலம் அமையக்கூடியவாறு எண்கள் வரக்கூடிய எண்கள் முக்கோண எண்களாகும். முக்கோண எண்களின் முதல் நிரையைப் பார்க்கிலும் அடுத்து வருகின்ற நிரைகள் ஒவ்வொன்றால் அதிகரித்துச் செல்லும்.
1, 3, 6, 10, 15, 21, 36, 45, 55

உதாரணமாக 5வது முக்கோணி எண் காணவேண்டுமானால் 5ஐ 6ஆல் பெருக்கி 2ஆல் வகுத்தால் விடை வரும்.


$$\frac{5 \times 6}{2} = \frac{30}{2} = 15$$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தம்பதிகளின் இளமைத்தோற்றம்




பேரப்பிள்ளை மாட்சிகாவால் வரையப்பட்ட அம்மம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா விருட்சம்

*கணபதிப்பிள்ளை + *வள்ளியம்மை
- *லக்சுமி
- *நாகலிங்கம்

*மரியாம்பிள்ளை + *சின்னாச்சி
- *நடேசர்
- **தவமணி**
- மீனாட்சிதேவி
- *தங்கவேலு

*நாகலிங்கம் + **தவமணி**
- ரவீந்திரன் + சஜிகலா → சஞ்சயன், தரணியா
- ரவிச்சந்திரன் + கருணாவதி → கோபிகா, பவன்
- முரளிதரன் + றாஜினி → அட்சயன்
- சுகந்தி + பக்தசீலன் → மாட்சிகா, தானியா, ெமல்லினன் (பிரான்ஸ்)
- மைதிலி + ஜெயராஜ்

*அமரர்களைக் குறிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

எங்கள் அன்புத் தெய்வம்

## திருமதி தவமணி நாகலிங்கம்

அவர்கள் இறைபதமடைந்த செய்திகேட்டு அகம் நாடிவந்து ஆறுதல் கூறியோருக்கும், உள்நாட்டிலும், வெளிநாடுகளிலுமிருந்து தொலைபேசி மூலம் ஆறுதல்கூறி அஞ்சலி செலுத்தியோருக்கும், இறுதிக்கிரியையிலும் பங்குகொண்டோருக்கும், கண்ணீரஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும், இன்னலுற்ற வேளையிலே எம்மை ஆரத்தழுவிக்கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயங்கனிந்த நன்றிகள்.

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

–பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்–



கணபதி பிறிண்டேர்ஸ் – திருநெல்வேலி. ☎ 021 321 5077

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org